12.09.2023
O.S.No. 181/2014

வா.சா.1. திரு.முத்துலிங்கம் த.பெ.இராஜேந்திரன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ.1-ன் ஆவணத்தின் நகல் வெள்ளலூரைச் சேர்ந்த எனது அத்தை பொ. பாப்பா என்பவர் தான் பத்திர அலுவலகத்திலிருந்து பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ன் சான்றிட்ட நகல் நான் தாக்கல் செய்து பெற்றேன். வா.சா.ஆ.1 ன் அசல் ஆவணம் என் வசம் தான் உள்ளது. அந்த ஆவணத்தை எதனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தொலைந்து போகக் கூடாது என்று நான் பாதுகாப்பாக வைத்துள்ளேன். வா.சா.ஆ.3 ஆவணமானது புல வரைபடத்தின் சர்வே எண்.759/38 க்கு வடக்கு பக்கம் எந்த புல எண்ணும் காணப்படவில்லை. ஆனால் தற்போது உள்ள புல வரைபடத்தில் அந்த இடத்தில் புல எண் காணப்படவில்லை. தற்போது சர்வே எண்.759/38 க்கு வடக்கு பக்கம் எந்த புல எண் காணப்படுகிறது என்றால் எனக்கு சர்வே எண் தற்சமயம் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.3 புல வரைபடம் நான் கிராம நிர்வாக அதிகாரியிடமிருந்து பெற்றேன். எப்போது இதை பெற்றேன் என்றால் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்ட பின்பு எனக்கு தேவைப்பட்டதால் நான் அதை பெற்றேன். வா.சா.ஆ.3 புல வரைபடத்தில் சர்வே எண்.759/30 ற்கு அருகில் தென்புறம் சர்வே எண். 759/31 காணப்படுகிறது என்றால் சரிதான். சர்வே எண்.759/31 ல் அடங்கியுள்ள நிலத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.759/31-ல் கண்டுள்ள சொத்திற்குள் போக விடாமல் நான் இரும்பு கேட் அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அது சர்வே எண்.759/32-ல் அமைந்துள்ள வீட்டிற்கு செல்லக் கூடிய பாதை என்பதால் நான் அதன்படி கேட் அமைத்தேன். சர்வே எண்.759/30 ல் அமைந்துள்ள தாவா 1ம் இலக்க சொத்து மற்றும் அந்த சொத்திற்கு மேற்கு புறம் உள்ள 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சென்ட்ரிங் ஜன்னல்கள் சர்வே எண்.759/31 ன் பக்கம் அமைந்துள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட ஒரு ஜன்னலும், எங்களுக்கு பாத்தியப்பட்ட இரண்டு ஜன்னல்களும், அந்த ஜன்னல்களுக்கு மேலே சன்ஷேடும் சர்வே எண்.759/31 ல் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.759/31-வழியாக சர்வே எண்.759/30-ல் அமைந்துள்ள வீட்டிற்கு போவதற்கு வாசலும், இல்லை. பாதையும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.759/31-ல் ஒரு இரும்பு கேட் அமைந்துள்ளது என நீதிமன்ற ஆணை அறிக்கையில் செல்லப்பட்டுள்ளது உண்மைதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சர்வே எண். 759/31-ற்கு நீள, அகலம் மற்றும் விஸ்த்திரம் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. சர்வே எண்.759/31- என்பது பொது மக்கள் அனைவரும் பயன்படுத்தும் பாதை என்றால் சரியல்ல. அது சர்வே எண்.759/32 ல் அமைந்துள்ள வீட்டிற்கு மட்டும் செல்லக்கூடிய பாதை. அந்த பக்கம் வேறு யார் வீட்டிற்கும் போவதற்கு பாத்தியம் இல்லை. சர்வே எண்.759/32-யை நான் கிரையம்

வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அதை நான் எனது தம்பி பெயருக்கு கிரையம் வாங்கியுள்ளேன். சர்வே எண்.759/33 ஆரம்பத்தில் முத்தையாவுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.759/33 ல் கண்ட சொத்து பாகப்பிரிவினை வழக்கான அசல் வழக்கு எண்.76/2014 வழக்கில் ஒரு சொத்து என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் இணைந்த புல வரைபடத்தில் புல எண்.759/46 என்பது இரண்டு இடத்தில் காணப்படுகிறது என்றால் சரிதான். ஒரே புல எண் புல வரைபடத்தில் இருவெவ்வேறு பகுதிகளில் காணப்பட்டால் அந்த புல வரைபடம் தவறானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் உள்ள சர்வேயர் அறிக்கையில் சர்வே எண்.759/38-ற்கான நீள, அகல அளவுகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.759/38 ற்கு பட்டா எண். 1270 என்பது முல்லை செல்வன் என்பவர் பெயரில் தாக்கல் ஆகியுள்ளது என்றால் அந்த பட்டாவைப் பார்த்து நான் தெரிந்து கொண்டேன். சர்வே எண்.759/30 – முல்லை செல்வன் மற்றும் முத்தையா பெயரில் கூட்டுப்பட்டாவாக தாக்கல் ஆகியுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 316/2, 316/3 ஆகியவற்றிற்கு முல்லைச்செல்வன் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டா என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண். 316/2, 316/3, 297/1-ல் கீழ்புறம் 36 செண்ட் ஆகியவை வா.சா.ஆ.1 பாகப் பிரிவினை பத்திரப்படி முத்தையாவின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்தையாவுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண். 316/2, 316/3, 297/1-ல் கீழ்புறம் 36 செண்ட் ஆகியவற்றை முத்தையா, முல்லை செல்வனுக்கு வா.சா.ஆ.17 ஆவணப்படி தான செட்டில்மெண்ட் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் சர்வே எண்.297/1-ல் கீழ்புறம் 36 செண்டில் மேல்புறம் 18 செண்ட் எனது தந்தையின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது அதையும் சேர்த்து மொத்தமாக 36 செண்டையும் முத்தையா, முல்லை செல்வனுக்கு முறைகேடாக செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவிட்டார். நான் கூறுவது போல் எனது தந்தைக்கு சர்வே எண்.297/1-ல் கீழ்புறம் 36 செண்ட்டில் மேல்புறம் 18 செண்ட் எழுத்து மூலமாகவோ, வாய்மொழியாகவோ எனது தந்தைக்கு ஒருபோதும் ஒதுக்கியதில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.297/1-ல் மொத்த விஸ்தீரணம் 72 செண்ட் என்றால் சரிதான். அந்த மொத்த விஸ்தீரணத்திற்கும் முத்தையா பெயரிலேயே பட்டா தாக்கலாகியுள்ளது என்றும், ஆண்டி வகையறாவுக்கு அதில் பாதி பாகம் ஒதுக்கியிருந்தாலும், அதைபொறுத்து பட்டா மாற்றம் செய்ய அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். அதனால் தான் முத்தையா பெயரிலும், முல்லைச் செல்வன் பெயரிலும் மொத்தம் 72 செண்ட் நிலத்திற்கும் கூட்டுப் பட்டாவாக தாக்கலாகியுள்ளது என்றால் சரிதான். அந்த பட்டா **பி.வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கில் ஆண்டி வகையறாவை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் முன்னிலையில் நில அளவை மேற்கொண்டபோது ஆண்டி வகையறாவிற்கு அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் எனக்கு ஞபாகமில்லை. சர்வே எண்.297/1-யை உட்பிரிவு செய்யாமல் நில

அளவை மேற்கொள்ள முடியாது என்று நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையரின் அறிக்கையுடன் இணைந்த மாதிரி வரைபடத்தில் M.N.O.P. பகுதி தாவா நான்காம் இலக்க சொத்தான சர்வே எண்.297/1-ல் அடங்கிய மொத்த விஸ்தீரணம் ஆன 72 செண்டிற்கான வரைபடம் என்றால் சரியல்ல. அது 36 செண்ட் மட்டும் தான் அதற்கு மேற்குபுறம் 36 செண்ட் தனியாக உள்ளது. நில அளவையர் சர்வே எண். 297/1-ல் மேற்குபுறம் 36 செண்டையும், கீழ்புறம் 36 செண்டையும் அளந்து அத்துமால் காண்பித்தாரா என்றால் இல்லை. அன்றைய தினம் நில அளவையரை அளவீடு செய்யவிடவில்லை. தகராறு வந்ததால் அளவீடு செய்யாமல் போய்விட்டார்கள். உட்பிரிவு செய்யப்படாததால் தான் நில அளவை மேற்கொள்ள முடியவில்லை என நீதிமன்ற ஆணையர் தன் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)